-5-

054194

# சுருக்கம்

வனம் – சமூக காடுகள் 2017–2018 மற்றும் 2018–2019ஆம் நிதி ஆண்டுகளில் சமூக வனத்தோட்டங்களை பொது ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான மகசூல் கணிப்பு பணிக்காக ரூ.8.99 லட்சம் ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

## சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம். 14) துறை

அரசாணை (டி) எண்.290

நாள்: 01.11.2019
விகாரி– ஐப்பசி–15
திருவள்ளுவர் ஆண்டு–2050
படிக்க.:

1. அரசாணை (டி) எண்.180, சுற்றுச்சூழல் மற்றும் வனத் (வனம்.14) துறை. நாள் 13.07.2018.
2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கடித எண். எஸ்.எப்.1/20544/2019, நாள் 13.08.2019.

-----

ஆணை:–

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2015–2016 மற்றும் 2016–2017ஆம் ஆண்டில் சமூக வனத் தோட்டங்களை பொது ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான மகசூல் கணிப்பு பணிக்காக ரூ.25.62 இலட்சம் தொகை ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கடிதத்தில், 2017–2018ஆம் ஆண்டில் சமூக வனத் தோட்டங்களை பொது ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான மகசூல் கணிப்புப் பணிக்குத் தேவையான ரூ.4.07 இலட்சம் மற்றும் 2018–2019ஆம் ஆண்டிற்கு ரூ.4.92 இலட்சம் ஆக மொத்தம் 2017–2018 மற்றும் 2018–2019 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து மொத்தம் ரூ.8.99 இலட்சம் தொகையை ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து, 2017–2018 மற்றும் 2018–2019 ஆகிய ஆண்டுகளில் சமூக வனத் தோட்டங்களை பொது ஏலத்தில் விற்பனை செய்வது தொடர்பான மர மகசூல் கணிப்புப் பணிக்குத் தேவைப்படும் தொகையான ரூ.8.99 இலட்சம் (ரூபாய் எட்டு இலட்சத்து தொண்ணூற்றொன்பதாயிரம் மட்டும்) தொகையினை, அனுமதித்தது மற்றும் இந்நேர்வில் கிடைக்கப்பெறும் வன வருவாய் அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும் எனும் நிபந்தனையுடன் ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது. மேலும் வன வருவாய் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்ட விபரம் அரசுக்கு அறிக்கை மூலம் தெரியப்படுத்தப்பட வேண்டுமென அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம், கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும் :–

"4406 – காடு வளர்ப்பு, வன விலங்குகள் பாதுகாப்பு குறித்த மூலதனச் செலவு – 01 – காடு வளர்ப்பு 102 – சமூக பண்ணைக்காடு வளர்ப்பு மாநிலச் செலவினங்கள் – JM சமுதாய தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் – 416 பெரும் பணிகள் 01 – பெரும் பணிகள்

(IFHRMS த.தொ.கு. 4406–01–102– JM –41601)"
(பழைய த.தொ.கு. – 4406–01–102–JM–1609)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் செலவினத்தினை மேற்கொள்ள கூடுதல் நிதியொதுக்கம் 2019–2020ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் பத்தி 3–ல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2019–2020ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித்(கா.ப.பா.வ.(ம) மீ) துறைக்கு அனுப்பி வைக்குமாறு முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.கு எண்.52181/கா.ப.பா.வ.(ம)மீ/2019, நாள் 25.10.2019 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1899(ஆயிரத்து எண்ணூற்று தொண்ணூற்று ஒன்பது) –ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷம்பு கல்லோலிகர்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை–15
தலைமை மாநில கணக்காயர், சென்னை–18
மாநில கணக்காயர், சென்னை–18
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.
(முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை–15 வழியாக)
நகல்
நிதித்( கா.ப.பா.வ.(ம) மீ /(வ.செ/பொது II) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

FINANCIAL ADVISER
Office of the
Principal Chief Conservator of Forests
(Head of Forest Force)
Chennai-15

(நா. செல்வம்)
அரசு சார்புச் செயலாளர்